இலங்கை

கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

பாடத்திட்டம் 2025

முன்னோடி வினாத்தாள்

மட்டம் 01

1604 – வணிகச் சூழல் (BEN)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

இலங்கை

கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

1604 – வணிகச் சூழல் [BEN]

பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்)

அனுமதிக்கப்பட்ட காலம்:

விடையெழுத : 03 மணித்தியாலம்

வினாத்தாள் கட்டமைப்பு:

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது: பகுதி A, பகுதி B மற்றும் பகுதி C.
- பகுதி A, பகுதி B மற்றும் பகுதி C ஆகியவற்றிலுள்ள அனைத்து வினாக்களும் கட்டாயமானவை.

புள்ளிகள்:

- ஒவ்வொரு பகுதிக்குமான புள்ளிகளின் ஒதுக்கீடு:

பகுதி	புள்ளிகள்
பகுதி A	40
பகுதி B	40
பகுதி C	20
மொத்தம்	100

- ஒவ்வொரு வினாவுக்குமான புள்ளிகள் வினாவுடன் காட்டப்பட்டுள்ளன.
- இவ்வினாத்தாளுக்கான சித்திப் புள்ளி 50 ஆகும்.

விடைகள்:

- அனைத்து விடைகளும் உங்களுக்குத் தரப்படுகின்ற விடைத்தாள் புத்தகத்தில் எழுதப்பட வேண்டும். வினாத்தாளிலேயே எழுதப்படும் விடைகள் புள்ளியிடுவதற்காகக் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- ஒவ்வொரு வினாவுக்குமான உங்கள் விடையை ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவும்.
- அனைத்துச் செய்முறைகளும் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.
- தாளின் ஓரங்களில் எழுத வேண்டாம்.

விடைத்தாள் புத்தகம்:

- ஒவ்வொரு விடைத்தாள் புத்தகத்தினதும் முகப்பு அட்டையில் அறிவுறுத்தல்கள் காட்டப்பட்டுள்ளன.

கணிப்பான்கள்:

- பரீட்சார்த்திகள் குறியீட்டு அட்சரகணிதம் மற்றும் வகையீடுகளுக்கான வசதிகளற்ற எந்தவொரு கணிப்பானையும் பயன்படுத்தலாம். நிரற்படுத்தத்தக்க கணிப்பான்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

இணைப்பு:

செயல் வினைச்சொற்களின் சரிபார்ப்புப் பட்டியல் – ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் (OTQ's தவிர) கொண்டிருக்கும். மாணவர்கள் சரிபார்ப்புப் பட்டியலில் தரப்பட்டுள்ள வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)
இருபது (20) கட்டாய வினாக்கள்

பகுதி A

(ஒவ்வொன்றிற்கும் இரண்டு புள்ளி வீதம் - மொத்தம் 40 புள்ளிகள்)

வினா 01

இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை வினா இலக்கத்துடன் உமது விடைத்தாள் புத்தகத்தில் எழுதுக.

1.1 வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி ஒன்றின் குறைந்தபட்ச பங்குதாரர்களின் எண்ணிக்கை :

(1) 1. (2) 2. (3) 20. (4) 100.

1.2 கீழ்வருவனவற்றில் நிறுவனமொன்றின் ஒரு பிரதான கூறாகக் (element) கருதப்பட **முடியாதது** எது?

(1) பொதுவான இலக்குகள். (2) மக்கள் குழு.
(3) கட்டமைப்பு. (4) இலாபம்.

1.3 கீழ்வருவனவற்றில் பணச் சந்தையின் ஒரு பங்கேற்பாளராக இருப்பவர் யார்?

(1) அரசாங்கம். (2) வர்த்தக வங்கிகள்.
(3) காப்புறுதிக் கம்பனிகள். (4) மேற்கூறிய யாவும்.

1.4 கீழ்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொள்க :

(a) வணிக நெறிமுறைக் கோவையை நடைமுறைப்படுத்துவது வணிகங்களின் வாடிக்கையாளர் களது நம்பிக்கையை உறுதி செய்கிறது.

(b) நெறிமுறைக் கோவையை நடைமுறைப்படுத்திய வணிகங்கள் வெற்றிகரமாக போட்டியிட முடியும்.

(c) நெறிமுறைக் கோவையைக் கடைப்பிடிப்பது கம்பனியின் நற்பெயரைக் குறைக்கும்.

மேலுள்ளவற்றில், ஒரு வணிகத்தின் வணிக நெறிமுறைகளின் நன்மைகள் தொடர்பான சரியான கூற்று /கூற்றுக்களாவன :

(1) **(a)** மாத்திரம். (2) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்.
(3) **(c)** மாத்திரம். (4) மேற்கூறிய யாவும்.

1.5 கீழ்வருவனவற்றில் ஒரு கூட்டு முயற்சியின் அம்சமாக **அமையாதது** எது?

(1) தொடர்ந்தியங்கும் கோட்பாடு இல்லாமை.

(2) இது குறுங் கால நோக்கத்திற்காக உருவாக்கப்படுகிறது.

(3) பதிவு செய்வது கட்டாயமானது.

(4) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினரின் பங்குபற்றல்.

1.6 கீழ்வருவனவற்றில் எது காப்புறுதிக் கோட்பாடு **அல்ல**?

(1) இரகசியத்தன்மை. (2) இழப்பீடு.

(3) நெருங்கிய காரணம். (4) அதியுச்ச நன்னம்பிக்கை.

1.7 கீழ்வருவனவற்றில் எந்த நிறுவனம் இலங்கை மத்திய வங்கியால் மேற்பார்வை **செய்யப்படுவதில்லை**?

(1) ஊழியர் சேமலாப நிதியம் (EPF). (2) உரிமம் பெற்ற விசேடத்துவ வங்கிகள்.

(3) பதிவு செய்யப்பட்ட குத்தகைக் கம்பனிகள். (4) ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF).

1.8 வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டால் அன்றி, காசோலை ஒன்றின் செல்லுபடிக் காலம் :

(1) 30 நாட்கள். (2) 3 மாதங்கள். (3) 4 மாதங்கள். (4) 6 மாதங்கள்.

1.9 கீழ்வருவனவற்றில் பணத்தின் ஒரு தொழிற்பாடாகக் கருதப்படுவது எது?

(1) பரிமாற்ற ஊடகம். (2) பெறுமதிக் களஞ்சியம்.

(3) பெறுமதியின் நியமம். (4) மேற்கூறிய யாவும்.

1.10 கீழ்வருவனவற்றில் இலத்திரனியல் பணம் (E-money) தொடர்பில் சரியான கூற்றாக அமைவது எது?

(1) இலத்திரனியல் பணத்தை நிகழ்நிலையில் பொருள்களை வாங்கப் பயன்படுத்த முடியாது.

(2) இலத்திரனியல் பணம் பௌதிகரீதியான நாணயங்களாக மாத்திரமே கிடைக்கத்தக்கவை.

(3) கடன் அட்டைகள் இலத்திரனியல் பணமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

(4) இலத்திரனியல் பணப் பரிவர்த்தனைகளுக்கு எப்போதும் நேருக்கு நேர் சந்தித்தல் வேண்டும்.

கீழே **1.11** தொடக்கம் **1.15** வரை தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உங்களது விடையை (சரியானது / தவறானது) வினா இலக்கத்துடன் உமது விடைத்தாள் புத்தகத்தில் எழுதுக :

1.11 இலங்கையில் உள்ள நிதிச் சந்தையானது பங்குச் சந்தையை (stock market) மாத்திரமே உள்ளடக்குகிறது.

1.12 வணிகங்களில் அரசாங்கம் செல்வாக்குச் செலுத்தும் ஒரு வழி, வரிச் சலுகைகளை வழங்குவது ஆகும்.

1.13 நிறுவன சமூகப் பொறுப்புடைமை (CSR) நடவடிக்கைகள் நிதி நன்கொடைகளாக மாத்திரமே வகைப்படுத்தப்படுகின்றன.

1.14 வங்கி ஒரு காசோலையின் குறுக்குக் கோடிடலை இரத்துச் செய்யலாம்.

1.15 காசோலை சரியாக எழுதப்படாதபோது, அது மறுக்கப்படலாம்.

இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கத்துடன் உமது விடைத்தாள் புத்தகத்தில் எழுதுக.

1.16 "நிகழ் நேர மொத்த தீர்ப்பனவு முறைமை" இலுள்ள இரண்டு (02) பங்கேற்பாளர்களைக் குறிப்பிடுக.

1.17 "பணச் சந்தைக்கும்" "மூலதனச் சந்தைக்கும்" இடையேயான இரண்டு (02) வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

1.18 "நிலைபேறான அபிவிருத்தி" என்பது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

1.19 இலங்கையில் உள்ள SME களின் செயலாற்றுகையை உயர்த்துவதற்கு வழங்கப்படும் இரண்டு (02) வசதிகளைப் (facilities) பட்டியலிடுக.

1.20 அரசாங்கத்தின் இரண்டு (02) நோக்கங்களைப் (objectives) பட்டியலிடுக.

(02 புள்ளிகள் வீதம், 40 புள்ளிகள்)

பகுதி A முடிவு

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

பகுதி B

வினா 02

BrightTech Solutions ஆனது தொழினுட்பத் துறையில் செயற்படுகின்ற ஒரு கம்பனி ஆகும். இக்கம்பனி மென்பொருள்களை விருத்தி செய்வதில் நிபுணத்துவம் பெற்றதாகும். இது ஒரு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி என்ற வகையில், இதன் நோக்கமாக இருப்பது இலாபம் ஈட்டுவதும் தொழினுட்பப் புத்தாக்கங்களும் ஆகும். இது 150 ஊழியர்களைக் கொண்ட ஒரு நடுத்தர அளவிலான வணிகமாக உள்ளதுடன் தெளிவான அறிக்கையிடல் வரிசைகளுடன் ஒரு படிநிலை நிறுவனக் கட்டமைப்பைப் பின்பற்றுகிறது. IT தொழிற்றுறையில் செயற்படுகின்ற இதன் பண்புகளில் விரைவான புத்தாக்கங்கள், திறன்மிக்க தொழிலாளர்களை நம்பியிருத்தல், அதிக போட்டிமிக்க சூழல் ஆகியன அடங்குகின்றன. **BrightTech** இன் கட்டமைப்பு மற்றும் தொழிற்றுறைக் கவனம் என்பன செயற்பாட்டு வினைத்திறனைப் பேணுகின்ற அதே வேளை சந்தைக் கேள்விகளுக்கு ஏற்ப விரைவாக மாறுவதற்கு அனுமதிக்கிறது.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) **BrightTech Solutions** ஐ ஓர் எடுத்துக்காட்டாகக் கொண்டு, தொழினுட்பத் தொழிற்றுறையில் செயல்படும் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் மூன்று (03) பிரதான பண்புகளை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) ஒரு தனியுடமை வியாபாரத்தின் மூன்று (03) பண்புகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) வணிக நிறுவனப் பண்புகள் (எ.கா. நோக்கம், உரிமை, அளவு, கட்டமைப்பு, தொழில்துறை வகைப்பாடு) **BrightTech Solutions** செயற்பாடுகளை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 03

SpeedLink Logistics என்பது பொருள்களை விரைவாகவும் பாதுகாப்பாகவும் விநியோகம் செய்வதன் மூலம் சில்லறை வணிகங்களுக்கு ஆதரவு வழங்கும் ஒரு போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் கம்பனி ஆகும். நிகழ்நிலை மூலமான விற்பனையின் எழுச்சியுடன், பொருள்கள் சரியான நேரத்தில் வாடிக்கையாளர்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்துவதில் **SpeedLink Logistics** முக்கிய பங்கு வகிக்கிறது. ஓடர்களைக் கண்காணிக்கவும் வாடிக்கையாளர்களை நிகழ் நேரத்தில் தொடர்பில் வைத்திருக்கவும் பயனுறுதி வாய்ந்த தொடர்பாடல் வழிமுறைகள் அவர்களுக்கு உதவுகின்றன. நம்பகமான போக்குவரத்து மற்றும் காப்புறுதியை வழங்குவதன் மூலம், **SpeedLink Logistics** வணிக வினைத்திறனை மேம்படுத்துவதுடன் வாடிக்கையாளர் திருப்தியையும் அதிகரிக்கிறது.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) **SpeedLink Logistics** இற்கு போக்குவரத்து ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) ஒரு பயனுறுதி வாய்ந்த தொடர்பாடல் முறைமையின் நான்கு (04) தன்மைகளை (qualities) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) ஆதரவுச் சேவைகளை வழங்குவதில் **SpeedLink Logistics** போன்ற கம்பனிகளுக்கு தொடர்பாடலின் இரண்டு (02) முக்கியத்துவங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 04

இலங்கையைச் சேர்ந்த சேதன மசாலா வகைகள் மற்றும் தேயிலையை ஏற்றுமதி செய்யும் ஓர் ஏற்றுமதியாளரான **Lanka Organics (Pvt) Ltd.** ஆனது உலகளாவிய சந்தைகளை அடைய இலத்திரனியல் வர்த்தகத் தளங்களுக்கு மாறுவதன் மூலம் ஒரு புதிய போக்கினைத் தழுவியது. நிலைபேறான மூலப் பொருள்களுக்கான வளர்ந்துவரும் தேவைக்கு பதிலளிக்கும் விதமாக, கம்பனி நியாயமான வியாபார வழங்குநர்களுடன் கூட்டுச்சேர்ந்து, அதன் வழங்கல் சங்கிலிகளில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக கட்டச்சங்கிலி தொழினுட்பத்தை ஏற்றுக்கொண்டது. அதே வேளை, உலகளாவிய சுற்றுச்சூழல் நியமங்களுடன் இணைந்து செல்வதற்காக உள்நாட்டுச் சில்லறை விற்பனையாளர்கள் தென்கிழக்காசியாவில் இருந்து சுற்றுச்சூழலுக்கு உகந்த பொதியிடல் தீர்வுகளை இறக்குமதி செய்யத் தொடங்கினர். இந்த மாற்றங்கள் சில்லறை விற்பனை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளின் புதிய போக்குகள் உலகளாவிய சூழல், நிலைபேறான தன்மை மற்றும் டிஜிடல் உருமாற்றம் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தும் சர்வதேச வர்த்தக விதிமுறைகள் ஆகியவற்றால் எவ்வாறு செல்வாக்குக்கு உட்படுகின்றன என்பதைப் பிரதிபலிக்கின்றன.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) சில்லறை விற்பனை மற்றும் ஏற்றுமதியில் உள்ள புதிய போக்குகள் **Lanka Organics (Pvt) Ltd.** போன்ற வணிகங்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை மூன்று (03) வழிகளில் **விபரிக்குக.**

(06 புள்ளிகள்)

(b) இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் தீர்மானங்களில் உலகளாவிய சூழல் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகிறது என்பதை **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 05

காலியைச் சேர்ந்த இளம் பட்டதாரியான **தரிந்து** என்பவர் சுற்றுச்சூழலுக்கு உகந்த நார் (coir) இனை அடிப்படையாகக் கொண்ட வீட்டு உபயோகப் பொருள்களை உற்பத்தி செய்கின்ற ஒரு சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனத்தைத் (SME) தொடங்கியுள்ளார். வரையறுக்கப்பட்ட மூலதனத்துடன், அவர் ‘‘என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா’’ திட்டத்தின் கீழ் ஒரு தொடக்கக் கடனைப் பெற்றுள்ளார். அவர் தனது சந்தைப்படுத்தல் மற்றும் நிதி முகாமைத்துவத் திறன்களை மேம்படுத்துவதற்காக தேசிய நிறுவன அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து (NEDA) வணிகப் பயிற்சியையும் பெற்றுள்ளார். வளர்ந்து வருகின்ற உள்நாட்டுக் கேள்வி மற்றும் நிகழ்நிலை விற்பனையுடன், சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் தனது உற்பத்திகளைக் காட்சிப்படுத்த, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் (EDB) **தரிந்து** தெரிவு செய்யப்பட்டார். தொழில்முனைவு மற்றும் SME ஆதரவு நிகழ்ச்சித் திட்டங்கள் எவ்வாறு புத்தாக்கங்கள், தொழில் உருவாக்கங்கள், மற்றும் ஏற்றுமதித் திறன்களை அதிகரிப்பதற்கும் தேசிய பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும் வழிவகுக்கும் என்பதை அவரது பயணம் நிரூபிக்கிறது.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) **தரிந்துவின்** வணிகத்தின் வெற்றிக்கு நிதி மற்றும் நிறுவனரீதியான ஆதரவு எவ்வாறு பங்களிப்புச் செய்கிறது என்பதை இரண்டு (02) வழிகளில் **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) **தரிந்துவின்** வணிகத்தைப் போன்ற SMEகள் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் மூன்று (03) வழிகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி B முடிவு

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி C

வினா 06

Green Valley Organics (Pvt) Ltd. (GVO) என்பது இலங்கையில் சேதன உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கின்ற ஒரு சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனம் (SME) ஆகும். இது ஆரோக்கியத்திற்கான விழிப்புணர்வு வேகமாக அதிகரித்து வரும் ஒரு போட்டிச் சந்தையில் இயங்குகிறது. இதன் விளைவாக, நிறுவனத்தின் வாடிக்கையாளர் தளம் பல ஆண்டுகளாக அதிகரித்திருக்கிறது.

GVO பலதரப்பட்ட தேடிக் கண்டுபிடிக்க முடியாத சேதனப் பொருள்களை வழங்குகிறது. இது சேதன உணவுக்கான வலுவான கேள்வியுடன் அதிக போக்குவரத்து நிறைந்த பகுதியில் அமைந்துள்ளது. இதன் விளைவாக, **GVO** நுகர்வோர் மத்தியில் ஒரு வலுவான பண்டக்குறி இருப்பை நிறுவியுள்ளது. எவ்வாறாயினும், **GVO** சேதனப் பொருள்களை ஆதாரமாகக் கொண்டுள்ளதால் அதிக இயக்கச் செலவுகளை எதிர்கொள்கிறது. மேலும், சேதனப் பொருள்களை நிர்வகிக்கும் விதிமுறைகளில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்களால் மூலப் பொருள் வழங்கலில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படுகின்றன. **GVO** ஒரு நிகழ்நிலை (ஒன்லைன்) இருப்பைக் கட்டியெழுப்புவதற்கான தனது முதலாவது நடவடிக்கையை எடுத்துள்ளது. மேலும், **GVO** அதன் வாடிக்கையாளர்களின் பல்வேறு விருப்பங்களையும் திருப்தி செய்வதற்கு புதிய பொருள்களை அறிமுகப்படுத்துகின்ற நோக்குடன் ஆய்வுகளைத் தீவிரமாக முன்னெடுக்கிறது.

இந்த வணிகம் ஒரு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியாகச் செயற்படுகிறது. இது வரையறுக்கப்பட்ட பொறுப்பு மற்றும் கடன்களை எளிதாக அணுகுதல் போன்ற அனுகூலங்களை வழங்குகிறது. எவ்வாறாயினும் இது பங்குப் பரிமாற்றங்களில் கட்டுப்பாடுகளையும் எதிர்கொள்வதுடன் கடுமையான ஒழுங்குமுறைத் தேவைகளுக்கும் இணங்குதல் வேண்டும். வழங்கல் சங்கிலி முகாமைத்துவம், தகவல் தொழினுட்ப ஆதரவு, மற்றும் தர உத்தரவாதம் போன்ற ஆதரவுச் சேவைகள் Green Valley இன் வெற்றிக்கு முக்கியமானவை. இந்தச் சேவைகளின் வினைத்திறனான முகாமை சரியான நேரத்தில் உற்பத்தி மற்றும் மாறாத பொருளின் தரம் போன்றவற்றை உறுதி செய்கிறது.

எவ்வாறாயினும், இலங்கையில் உள்ள பல SME-களைப் போலவே, **Green Valley** உம் நிதி அணுகல் இல்லாமை, போதுமான தொழினுட்ப அறிவு இல்லாமை, மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு விரிவடைவதில் உள்ள சிரமங்கள் போன்ற சவால்களை எதிர்கொள்கிறது. வாடிக்கையாளர்கள், வழங்குநர்கள், ஊழியர்கள், அரசாங்க முகவராண்மைகள் மற்றும் முதலீட்டாளர்கள் உள்ளிட்ட நாட்டதாரர்கள் நிறுவனத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் முக்கிய வகிபாகமொன்றை ஆற்றுகின்றனர். இந்த நாட்டதாரர்களுடனான நேர்மறையான உறவுகள் வணிகத்தின் நிலைபேற்றுத்தன்மையையும் எதிர்கால வளர்ச்சியையும் உறுதி செய்கின்றன.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்தி, **GVO** இன் வணிகச் சூழலை **மதிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(b) **GVO** ஒரு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியாக இருப்பதன் இரண்டு (02) அனுகூலங்களையும் இரண்டு (02) பிரதிகூலங்களையும் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) **GVO** இன் செயற்பாடுகளுக்குத் தேவையான மூன்று (03) ஆதரவுச் சேவைகளைப் **பட்டியலிடுக.** (03 புள்ளிகள்)

(d) இலங்கையில் உள்ள SME என்ற வகையில் **GVO** எதிர்கொள்கின்ற இரண்டு (02) சவால்களை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(e) **GVO** இன் இரண்டு (02) நாட்டதாரர்களை **அடையாளங் கண்டு,** வணிகத்தில் அவர்களின் தாக்கத்தை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி C முடிவு

செயல் வினைச் சொற்களின் சரிபார்ப்புப் பட்டியல்

மட்டம்	செயல் வினைச்சொல்	வரைவிலக்கணம்	மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள்
நினைவிற் கொள்ளல் உண்மைகள், பதங்கள், அடிப்படை எண்ணக்கருக்கள் , அல்லது பதில்கள் எதைக் குறிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளும் தேவையின்றி அவற்றை நினைவிற் கொள்ளுதல்	அடையாளங் காண்க இனங்காண்க/ (Identify)	யாரையாவது அல்லது எதையாவது ஏற்பிசைவு செய்தல்	தலைப்பின் பிரதான பகுதிகளை கண்டுபிடித்து, பெயரிடுதல்
	வரையறுக்க (Define)	ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் கருத்து	ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் தெளிவான கருத்தை வழங்குதல்
	ஏற்பிசைவு செய்க (Recognize)	முன்பு பார்த்த ஒன்றைப் பற்றிய விழிப்புணர்வு	முந்தைய கற்றலில் இருந்து ஏதாவது ஒன்றைக் கண்டறிந்து ஏற்றுக் கொள்ளல்
	குறிப்பிடுக/ கூறுக (State)	தகவலின் தெளிவானதும் சுருக்கமானதுமான வெளிப்பாடு	பிரதான விடயங்கள் அல்லது எண்ணக்கருக்களை நேரடியான முறையில் வெளிப்படுத்தல்
	பட்டியலிடுக/ நிரற்படுத்துக. (List)	பெயர்கள், எண்கள், அல்லது உருப்படிகளின் தொடர்	பிரதான விடயங்களை ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் எழுதுதல்
	பதிவு செய்க (Record)	ஒரு முறைமையில் விவரங்களை உள்ளிடல் (கணக்கீடு அல்ல).	தொடர்புடைய விவரங்களை தெளிவாகவும் துல்லியமாகவும் உள்ளிடுதல்
விளங்கிக் கொள்ளல் தகவல் சாதனங்களின் பொருளைப் புரிந்து கொள்ளுதலும் அதன் உட்பொருளை விளக்குவதற்கு அல்லது அதனை விபரிப்பதற்கு இயலுமாக இருத்தல்	கட்டியெழுப்புக (Construct)	கூறுகளை இணைப்பதன் மூலம் எதையாவது உருவாக்குதல்	வெவ்வேறு பகுதிகளைக் கொண்டு ஒரு முழுமையான கருத்துள்ளதாக ஆக்குதல்
	வேறுபடுத்துக (Differentiate)	இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களுக்கு இடையேயான வேறுபாடுகளை ஏற்பிசைவு செய்தல்	எண்ணக்கருக்கள் அல்லது உருப்படிகளுக்கு இடையேயான வேறுபாடுகளை கோடிட்டுக் காட்டுதல்
	கலந்துரையாடுக / ஆராய்க (Discuss)	ஒரு தலைப்பைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களைக் கருதுதல்	பல்வேறு கண்ணோட்டங்களை ஆராய்ந்து நுண்ணறிவுகளை வழங்குதல்
	விபரிக்க (Explain)	எதையாவது பெரியளவில் விரிவாகத் தெளிவுபடுத்தல்	தர்க்கரீதியான மற்றும் விரிவான விளக்கங்களை வழங்குதல்
	எடுத்துக்காட்டுகளுடன் விபரிக்குக (Illustrate)	ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த உதாரணங்கள், விளக்கப்படங்கள், அல்லது காட்சிகளை பயன்படுத்தல்	பொருத்தமான உதாரணங்கள் அல்லது காட்சிகளுடன் விபரிப்புகளை ஆதரித்தல்
	உட்பொருளை விளக்குக (Interpret)	தகவல் அல்லது செயல்களின் அர்த்தத்தை விபரித்தல்	உங்கள் சொந்த மொழிநடையில் ஏதாவதொன்றின் பொருளை விபரித்தல்
	விளக்குக (Describe)	ஏதாவதொன்றின் விரிவான விளக்கம்	கட்டமைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய விவரங்களை வழங்குதல்
	பொழிப்பாக்குக (Summarise)	பிரதான விடயங்களின் சுருக்கமான கூற்று	பிரதான தகவல்களைச் சுருக்கமாக முன்வைத்தல்
பிரயோகித்தல் கற்றுக்கொண்ட விடயத்தை புதிய மற்றும் உறுதியான சூழ்நிலைகளில் பயன்படுத்துதல். இதற்கு அறிவு மற்றும் திறன்களின் நடைமுறைப் பிரயோகம் தேவைப்படுகிறது..	பிரயோகிக்க (Apply)	ஒரு சூழ்நிலையில் அறிவு, திறன்கள், அல்லது விதிகளைப் பயன்படுத்தல்	ஒரு முடிவை அடைய தொடர்புடைய அறிவு, அல்லது நுட்பங்களைப் பயன்படுத்தல்
	கணிக்குக / கணிப்பீடு செய்க (calculate)	கணித அல்லது தர்க்க முறைகள் ஊடாக பெறுமதியை தீர்மானித்தல்	ஒரு தீர்வை அடைய எண் அல்லது தர்க்கரீதியான செயன்முறைகளைப் பயன்படுத்தல்
	தீர்மானிக்க (Determine)	ஆய்வு அல்லது கணக்கீடு மூலம் ஏதாவதொன்றை நிறுவுதல்	கணக்கீடு அல்லது ஆய்வுக்காக ஏதாவதொன்றை கண்டுபிடித்தல் அல்லது முடிவு செய்தல்
	செயல் விளக்கமளிக்குக (Demonstrate)	ஒரு செயன்முறை அல்லது முறையைக் காண்பித்தல்	கட்டமைக்கப்பட்ட படிமுறைகள் ஊடாக தெளிவான உதாரணத்தைக் காட்டுதல்
	தயாரிக்க (Prepare)	பயன்பாட்டிற்கான பொருள்கள் அல்லது தகவல்களை ஒழுங்கமைத்தல்	ஒரு பணியில் ஈடுபடுவதற்கு முன் தேவையான விவரங்களை வரிசைப்படுத்தல்
	பயன்படுத்துக (Use)	ஒரு நோக்கத்திற்காக எண்ணக்கரு, கருவி, அல்லது முறையைப் பிரயோகித்தல்	தொடர்புடைய அறிவு அல்லது வளங்களைப் பொருத்தமானவாறு நடைமுறைப்படுத்தல்
	முன்வைக்குக (Present)	தகவல்களை பயனுறுதிமிக்க வகையில் பகிர்தல்	பிரதான நுண்ணறிவுகளை தெளிவாகவும் தொழில்முறை ரீதியாகவும் வழங்குதல்

மட்டம்	செயல் வினைச்சொல்	வரைவிலக்கணம்	மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள்
பகுப்பாய்வு தகவல்களின் கட்டமைப்பு மற்றும் தொடர்பை புரிந்து கொள்வதற்கு தகவல்களை கூறுகளாகப் பிரித்தல்	பகுப்பாய்வு செய்க (Analyse)	ஒரு பொருளை அதன் பாகங்களைப் புரிந்துகொள்ள விரிவாக ஆராய்தல்	சிறந்த புரிதலுக்காக தகவலை பிரதான பகுதிகளாகப் பிரித்தல்
	ஒப்பிடுக (Compare)	ஒற்றுமைகள் மற்றும் / அல்லது வேறுபாடுகளை ஆராய்தல்	பிரதான பொதுவான தன்மைகள் மற்றும் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுதல்
	பிரித்தறிக (Distinguish)	தனித்துவமான பண்புகளை ஏற்பிசைவு செய்தல்	பொருள்களை ஒன்றிலிருந்தொன்று எது வேறுபடுத்துகிறது என்பதை அடையாளங் காணல்
	பரீட்சிக்க / சோதிக்க (Examine)	ஏதாவது ஒன்றின் தன்மையைத் தீர்மானிக்க அதனைப் பரிசோதித்தல்	ஏதாவது ஒன்றைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள அதைக் கூர்ந்து பார்த்தல்
	கோடிட்டுக் காட்டுக (Outline)	பிரதான விடயங்களின் பொழிப்பு	பிரதான அம்சங்களின் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கண்ணோட்டத்தை வழங்குதல்
	நடத்துக (Conduct)	ஒரு பரிசோதனை, கணக்கெடுப்பு, அல்லது ஆய்வுக்கான கூறுகளை ஒழுங்கமைத்தல்	ஒரு பணியை முறையாக முன்னெடுக்க கட்டமைக்கப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றுதல்
	அறிக்கையிடுக (Report)	கண்டறிதல்களின் கட்டமைக்கப்பட்ட முன்வைப்பு	பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்களை ஒரு தெளிவான மற்றும் தர்க்கரீதியான வடிவத்தில் முன்வைத்தல்
மதிப்பீடு தேர்வு நிபந்தனை அல்லது நியமங்களின் அடிப்படையில் யோசனைகள் அல்லது பொருள்களின் பெறுமதி அல்லது தரம் குறித்து தீர்ப்புகளை வழங்குதல்	ஆலோசனை வழங்குக (Advise)	யோசனைகள் அல்லது பரிந்துரைகளை வழங்குதல்	பகுப்பாய்வின் அடிப்படையில் தகவலறிந்த வழிகாட்டலை வழங்குதல்
	மதிப்பீடு செய்க (Evaluate)	பெறுமதி, பயனுறுதித்தன்மை, அல்லது தாக்கத்தின் விமர்சன ரீதியான மதிப்பீடு	தேர்வு நிபந்தனைகளின் அடிப்படையில் ஏதாவது ஒன்றின் தரம் அல்லது தொடர்புடைமையை மதிப்பிடுதல்
	அமைக்குக (Formulate)	ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை அல்லது திட்டத்தின் அபிவிருத்தி	நன்கு வரையறுக்கப்பட்ட முறை அல்லது உபாயத்தை உருவாக்குதல்
	பரிந்துரை செய்க (Recommend)	பொருத்தமான செயல் திட்டம் பற்றி யோசனை முன்வைத்தல்	தர்க்கரீதியான பகுத்தறிவால் ஆதரிக்கப்படும் ஒரு அணுகுமுறையை முன்மொழிதல்
உருவாக்குதல் ஒரு ஒத்திசைவான அல்லது செயற்பாட்டு முழுமையை உருவாக்க, புதுமையான வழிகளில் கூறுகளை இணைத்தல்; புதிய யோசனைகள், உற்பத்திகள், அல்லது புரிதல் வழிகளை உருவாக்கும் ஆற்றல்	உருவாக்குக (Create)	புதிதாக ஏதாவதொன்றை உருவாக்குதல்	அசலான மற்றும் நோக்கமுள்ள ஏதாவதொன்றை விருத்தி செய்தல்
	மதிப்பிடுக (Assess)	தரம், ஆற்றல், அல்லது தன்மை பற்றி மதிப்பீடு செய்தல் அல்லது மதிப்பிடுதல்	கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் நியாயமான தீர்ப்பை வழங்குதல்
	விருத்தி செய்க (Develop)	ஒரு யோசனை, பொருள், அல்லது எண்ணக்கருவின் விரிவாக்கம் அல்லது செம்மையாக்கம்	காலப்போக்கில் ஒரு யோசனையை வலுப்படுத்தி, மேம்படுத்துதல்
	முன்மொழிக (Propose)	கருத்திற் கொள்வதற்காக ஒரு திட்டத்தை அல்லது எண்ணக் கருவைப் பரிந்துரைத்தல்	ஒரு யோசனை அல்லது கட்டமைக்கப்பட்ட பரிந்துரையை முன்வைத்தல்
	இணைப்பாக்கம் செய்க (Synthesis)	ஒரு ஒத்திசைவான முழுமையை உருவாக்க பல்வேறு கூறுகளையும் ஒருங்கிணைத்தல்	பல யோசனைகள் அல்லது நுண்ணறிவுகளை ஒரு அர்த்தமுள்ள முடிவில் ஒருங்கிணைத்தல்
	வடிவமைக்குக (Design)	ஏதாவது ஒன்றிற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டத்தை உருவாக்குதல்	ஒரு பொருள் அல்லது செயன்முறைக்கு ஒரு விரிவான கட்டமைப்பை அமைத்தல்
	தொகுக்குக (Compile)	பல்வேறு மூலங்களில் இருந்து தகவல்களை ஒன்றுசேர்த்தல்	சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒரு விரிவான வடிவத்தில் ஒழுங்கமைத்தல்

இலங்கை

கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

பாடத்திட்டம் 2025

பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

மட்டம் 01

1604 – வணிகச் சூழல் (BEN)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)
இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

பகுதி A

வினா 01 இற்கான விடைகள்

1.1	-	1	**1.6**	-	1	**1.11**	-	தவறானது
1.2	-	4	**1.7**	-	4	**1.12**	-	சரியானது
1.3	-	4	**1.8**	-	4	**1.13**	-	தவறானது
1.4	-	2	**1.9**	-	4	**1.14**	-	தவறானது
1.5	-	3	**1.10**	-	3	**1.15**	-	சரியானது

(02 புள்ளிகள் வீதம், 30 புள்ளிகள்)

1.16 (1) இலங்கை மத்திய வங்கி.

(2) உரிமம் பெற்ற வர்த்தக வங்கி.

(3) அரச பிணையங்களின் முதன்மை விற்பனையாளர்கள்.

(4) ஊழியர் சேமலாப நிதியம். **(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

1.17 .

அம்சங்கள்	பணச் சந்தை	மூலதனச் சந்தை
நிதியுதவிகளின் காலப்பகுதி	ஒரு வருடத்தை விஞ்சாத காலப்பகுதிக்கான குறுங்கால நிதியுதவி உடன்பாடு.	ஒரு வருடத்தை விஞ்சிய காலப்பகுதிக்கான நீண்ட கால நிதியுதவிக்கான ஒரு சந்தை.
நிதியுதவி வழங்கல்	தொழில்துறையின் தற்போதைய வணிகச் செயற்பாடுகளுக்கு நிதியளிப்பதற்கான நிதியை வழங்குவதுடன் அரசாங்கத்தின் குறுகிய காலத் தேவைகளையும் வழங்குகிறது.	வியாபாரம் மற்றும் வர்த்தகத்தின் நிலையான மூலதனத் தேவைகள் மற்றும் அரசாங்கத்தின் நீண்டகாலத் தேவைகள் ஆகியவற்றுக்கு நிதியளிப்பதற்கான நிதியை வழங்குகிறது.
கருவிகளுடன் தொடர்புடையது	இது வர்த்தக உண்டியல்கள், மாற்றுண்டியல்கள், திறைசேரி உண்டியல்கள், வர்த்தகத் தாள்கள் போன்றவற்றுடன் தொடர்புடையது.	இது பங்குகள், தனிச்சங்கள், அரசாங்க முறிகள் போன்றவற்றுடன் தொடர்புடையது.
பிரதான நிறுவனத்தின் வகிபாகம்	மத்திய வங்கியும் வர்த்தக வங்கிகளுமே பணச் சந்தையில் உள்ள பிரதான நிறுவனங்களாகும்.	அபிவிருத்தி வங்கிகளும் காப்புறுதிக் கம்பனிகளுமே மூலதனச் சந்தையில் ஆதிக்கம் செலுத்தும் சக்திகளாக உள்ளன.
கருவிகளின் கிடைப்பனவு	பணச் சந்தைச் சாதனங்கள் பொதுவாக இரண்டாம்நிலைச் சந்தையைக் கொண்டிருப்பதில்லை.	மூலதனச் சந்தைக் கருவிகள் பொதுவாக இரண்டாம்நிலைச் சந்தைகளைக் கொண்டிருக்கின்றன.
உபபிரிவு	பணச் சந்தையில், அத்தகைய உபபிரிவு இல்லை.	மூலதனச் சந்தையில், முதன்மைச் சந்தை மற்றும் இரண்டாம்நிலைச் சந்தை என்ற உபபிரிவு காணப்படுகிறது.
பரிவர்த்தனை இடம்	பரிவர்த்தனைகள் பெரும்பாலும் தொலைபேசி மூலம் மேற்கொள்ளப்படுகிறது. முறையான இடம் ஏதும் இல்லை.	பரிவர்த்தனைகள் முறையான இடமொன்றில் மேற்கொள்ளப்படுகின்றன. எ.கா. பங்குப் பரிவர்த்தனை நிலையம்.

(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)

1.18 தற்போதைய பயன்பாடு அதேபோன்று எதிர்கால நுகர்வுக்கு உகந்ததாக வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அடையப்படும் அபிவிருத்தி நிலைபேறான அபிவிருத்தி என அழைக்கப்படுகிறது. **(02 புள்ளிகள்)**

1.19 (1) செயற்படுத்தும் சூழல்

(2) நவீன பொருத்தமான தொழினுட்பம்.

(3) தொழில்முனைவுக் கலாசார மற்றும் திறன் அபிவிருத்தி.

(4) நிதிக்கான அணுகல்.

(5) சந்தை வசதிகள்.

(6) ஆய்வு மற்றும் அபிவிருத்தி.

(7) வினைத்திறனான வளப் பாவனை.

(8) பிராந்திய சமநிலை. **(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

1.20 (1) பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்.

(2) முழு வேலை.

(3) பொருளாதார ஸ்திரத்தன்மை.

(4) வருமானத்தின் சமமான பகிர்வு.

(5) சிறந்த சர்வதேச வர்த்தகத்தை உருவாக்குதல்.

(6) நிலைபேறான அபிவிருத்தி. **(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

(மொத்தம் 40 புள்ளிகள்)

பகுதி A முடிவு

நான்கு (04) கட்டாய வினாக்கள்

பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

வினா 02 இற்கான விடைகள்

அலகு 1 – வணிகத்தின் எண்ணக்கருக்கள், வணிகச் சூழல் மற்றும் வணிக நிறுவனங்கள் மீதான அதன் தாக்கம்

அலகு 2 – நிறுவனங்களின் பல்வேறு வகைகள்

கற்றற் பேறுகள் - நிறுவனங்களின் நோக்கம், உரிமை, அளவு, கட்டமைப்பு, மற்றும் தொழிற்றுறையின் பண்புகள் உட்பட நிறுவனங்களின் பல்வேறு வகைப்படுத்தல்களை விபரித்தல்.

- வணிகச் சூழலையும் நிறுவனம் மீதான அதன் தாக்கங்களையும் விபரித்தல்.

(a) BrightTech Solutions போன்ற ஒரு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி பல பிரதான பண்புகளைக் கொண்டிருக்கிறது.

வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி சார்ந்தது:

(1) **வரையறுத்த பொறுப்பு:** பங்குதாரர்களின் தனிப்பட்ட சொத்துக்கள் பாதுகாக்கப்படுகின்றன, வணிகம் இழப்புகளை அல்லது சட்டச் சிக்கல்களை எதிர்கொள்ளும்போது தனிப்பட்ட நிதிசார் இடர் குறைவடைகிறது.

(2) **தனிப்பட்ட உரிமை:** பங்குகள் பகிரங்கமாக வர்த்தகம் செய்யப்படுவதில்லை என்பதுடன் அவை பொதுவாக ஒரு சிறிய குழுவிடம் வைத்திருக்கப்படுகிறது. இது தீர்மானங்கள் மற்றும் தந்திரோபாயங்கள் மீது பெரியளவு கட்டுப்பாட்டைப் பேண கம்பனியை அனுமதிக்கிறது.

(3) **சட்ட ஆளுமை:** கம்பனி அதன் உரிமையாளர்களின் சுயாதீனத்தில் உள்ளது. அது ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கான வலுவைக் கொண்டிருப்பதுடன் அதன் சொந்தப் பெயரில் வழக்குத் தொடரவோ அல்லது வழக்குத் தொடரப்படவோ முடியும். கம்பனி அதன் உரிமையாளர்களிடமிருந்து சுயாதீனமாக வெளியேறுகிறது. அது ஒப்பந்தங்களில் நுழைய, அதன் சொந்தப் பெயரில் வழக்குத் தொடர அல்லது வழக்குத் தொடரப்பட அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

தொழிற்றுறை சார்ந்தது :

(1) **புத்தாக்கம் மீது கவனம் செலுத்துதல்:** தொழினுட்பத் துறையில் செயற்படும் **BrightTech,** போட்டித்தன்மையுடன் இருக்க அதன் தயாரிப்புகளை தொடர்ந்து புதுமைப்படுத்தி, மேம்படுத்த வேண்டும்.

(2) **திறமையான பணியாளர்கள் :** கம்பனி தொழினுட்ப ரீதியில் திறமையான ஊழியர்களில் தங்கியுள்ளது. இது அதன் வாடகைக்கமர்த்தல் மற்றும் பயிற்சி உத்திகளை வடிவமைக்கிறது.

(3) **சுறுசுறுப்பு மற்றும் தகவமைப்பு :** தொழினுட்பத் தொழிற்றுறை சந்தை மாற்றங்களுக்கு விரைவான பதில்களைத் தேவைப்படுத்துகிறது. மேலும், **BrightTech** இன் அமைப்பு புதிய யோசனைகளை விரைவாகச் செயற்படுத்த உதவுகிறது.

(01½ புள்ளிகள் வீதம், 03 புள்ளிகள்)

(b)

உரிமை	நபர் ஒருவருக்குச் சொந்தமானது.
மூலதனம்	மூலதனம் தனி உரிமையாளரால் வழங்கப்படுகிறது.
நிருவாகமும் தீர்மானமெடுத்தலும்	வணிகம் உரிமையாளரால் அல்லது அவரது மேற்பார்வையின் கீழ் நிருவகிக்கப்படுகிறது. எனவே, வணிகத் தீர்மானங்கள் வணிகராலேயே எடுக்கப்படுகின்றன.
பொறுப்பு	வரையறுக்கப்பட்ட பொறுப்பு காணப்படுகிறது.
தனியான சட்ட ஆளுமை	தனியான சட்ட ஆளுமை இல்லை.
பதிவு	பதிவுசெய்வது கட்டாயமல்ல.
இலாபங்களும் நட்டங்களும்	தனியே தாங்கப்படுகிறது.
வரிக் கொடுப்பனவு	வரிகள் வணிகரின் பெயரில் தனிப்பட்ட விதத்தில் செலுத்தப்பட வேண்டும்.
கணக்கீடும் கணக்காய்வும்	கணக்கீடும் கணக்காய்வும் கட்டாயமல்ல.
தொடர்ந்தியங்கும் தன்மை	தொடர்ந்தியங்கும் தன்மை இல்லை.

(01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)

(c)

(1) **நோக்கம் : BrightTech** இன் இலாபம் மற்றும் புத்தாக்கம் மீதான இரட்டைக் கவனக்குவிப்பானது சந்தைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உயர் தர மென்பொருள் தீர்வுகளை விருத்தி செய்வதில் முதலீடு செய்வதாகும்.

(2) **உரிமை :** வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி என்ற வகையில், இது பொதுச் சந்தை அழுத்தங்களைத் தவிர்ப்பதுடன், தீர்மானமெடுப்பதிலும் நீண்டகாலத் திட்டமிடலிலும் கவனம் செலுத்த முடிகிறது.

(3) **அளவு :** 150 ஊழியர்களுடன், **BrightTech** அதன் அணியினரை வினைத்திறனான முறையில் முகாமை செய்ய முடியும். அதே வேளை விரைவாக வளர அல்லது திசையை மாற்றப் போதுமான நெகிழ்வுத்தன்மையுடன் இருக்கும்.

(4) **கட்டமைப்பு :** அதன் படிநிலைக் கட்டமைப்பானது தெளிவான அறிக்கையிடல் வரிசைகளை வழங்குவதுடன், பொறுப்புக்கூறல் மற்றும் பயனுறுதிமிக்க செயற்றிட்ட முகாமைத்துவத்தை மேம்படுத்துகிறது.

(5) **தொழிற்றுறை வகைப்படுத்தல் :** IT துறையில் செயற்படுவதற்கு, **BrightTech** தொடர்ந்து வளர்ந்துவருகின்ற தொழினுட்பங்களைப் பின்பற்றுவதும் வேகமாக மாறிவரும் நுகர்வோர் தேவைகளுக்கு பதிலளிப்பதும் அவசியமாகும்.

(முழுப் புள்ளிகளையும் பெறுவதற்கு 2 பண்புகள் மாத்திரம் எதிர்பார்க்கப்படுகிறது)

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 03 இற்கான விடைகள்

அலகு 3 – வணிகங்களுக்கான ஆதரவுச் சேவைகள்

கற்றற் பேறுகள் - ஆதரவுச் சேவைகளின் வகிபாகத்தை, முக்கியத்துவத்தை விபரித்தல்

- ஒவ்வொரு ஆதரவுச் சேவையினதும் பண்புகளை பட்டியலிட்டு, விபரித்தல்

(a) (1) **செயற்பாடுகளின் பயனுறுதித்தன்மையை அதிகரித்தல் :**

போக்குவரத்து என்பது வாடிக்கையாளரின் பொருள்களைக் கையாளுதல், கொண்டு செல்லுதல், களஞ்சியப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு சிக்கலான செயன்முறை ஆகும். ஒரு நல்ல போக்குவரத்து முறைமை தெரிவுகளை வினைத்திறனாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் மேற்கொள்ள உதவுகிறது.

(2) **பொருள்களை உரிய நேரத்தில் விநியோகித்தல் :**

பொருள்களை விநியோகம் செய்ய எடுக்கும் நேரமானது விநியோக சேவை, தூரம், சென்றடையும் நாடு போன்றவை உள்ளிட்ட பல காரணிகளில் தங்கியுள்ளது. எவ்வாறாயினும், ஒரு நல்ல போக்குவரத்து முறைமையால் பொருள்களை உரிய நேரத்தில் வழங்க முடியும்.

(3) **குறைந்த செலவுகளின் விளைவுகள் :**

சரக்குகளைக் கப்பலில் ஏற்றுவதை ஒருங்கிணைப்பது அலகொன்றின் போக்குவரத்துச் செலவைக் குறைப்பதற்கான ஒரு பயனுறுதிவாய்ந்த வழிமுறை ஆகும். இது வணிகத்தில் ஒட்டுமொத்த மாற்றுத்தெரிவுக் கிரயத்தை விளைவாக்குகிறது.

(4) **குறைந்த செலவில் நல்ல தரமான பொருள்கள் :**

பொருள்கள் பாதுகாப்பாக பொதி செய்யப்படுவதையும் பொருள்கள் நல்ல தரத்தில் வாடிக்கையாளருக்கு வழங்கப்படுவதையும் உறுதி செய்தல். மேலும், குறைந்த போக்குவரத்துச் செலவு காரணமாக, வாடிக்கையாளர்கள் குறைந்த செலவில் நல்ல தரமான பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கான நிலைமை காணப்படுகிறது.

(5) **உரிய நேரத்தில் ஊழியர்களை அடைதல் :**

அதிகமான ஆடைத்தொழிற்சாலை நிறுவனங்கள் தமது ஊழியர்களின் போக்குவரத்திற்கு போக்குவரத்து வசதிகளை வழங்குகின்றன. எனவே, நிறுவனம் ஊழியர்களை உரிய நேரத்திற்குத் தனது தொழிற்சாலைக்குக் கொண்டு வருகின்ற நிலைமை காணப்படுகிறது.

(6) **உற்பத்திப் பொருள்களை தொழிற்சாலைகளுக்கு உரிய நேரத்திற்கு கொண்டு வருதல் :**

நிறுவனம் பொருள்களின் தரத்தைப் பேணுவதற்கான கவனத்தைச் செலுத்துகின்ற அதே வேளை, குறைந்த செலவுடன் விரைவான போக்குவரத்து முறையைப் பயன்படுத்த முடியும். இது பொருள்கள் உரிய நேரத்தில் தொழிற்சாலையை வந்தடைவதை உறுதி செய்யும். இது கம்பனியில் வாடிக்கையாளர் தளத்தை அதிகரிக்க வழிவகுக்கும்.

(02 புள்ளிகள் வீதம், 04 புள்ளிகள்)

(b)

(1) பூரணத்தன்மை.

(2) சுருக்கமான ஆராய்வு

(3) உறுதியான தன்மை.

(4) பணிவான தன்மை.

(5) சரியான தன்மை.

(6) இரகசியம் / பாதுகாப்பு.

(7) குறைந்த செலவு.

(8) கிடைப்பனவுத் தன்மை.

(9) வேகம். **(½ புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

(c)

(1) **நிகழ் நேரக் கண்காணிப்பு :** வாடிக்கையாளர்கள் விநியோகங்களைக் கண்காணிக்க உதவுகிறது. இது வெளிப்படைத்தன்மையையும் நம்பிக்கையையும் மேம்படுத்துகிறது.

(2) **வினைத்திறனான முறையில் பிரசினங்களைத் தீர்த்தல் :** தாமதங்கள் அல்லது பிரச்சினைகளுக்கான விரைவான பதில்கள். இது எதிர்மறையான வாடிக்கையாளர் அனுபவங்களைக் குறைக்கிறது.

(3) **செயற்பாட்டு ஒருங்கிணைப்பு :** சாரதிகள், களஞ்சியப் பணியாளர்கள் மற்றும் முகாமைத் துவத்திற்கிடையே சீரான தொடர்பாடலை உறுதி செய்கிறது. இதனால் குழப்பம் மற்றும் தாமதங்கள் தவிர்க்கப்படுகின்றன.

(4) **வாடிக்கையாளர் சேவை :** தெளிவாகவும் உரிய நேரத்திலும் புதுப்பிப்புகளை மேற்கொள்வது வலுவான சேவைநாடுநர் உறவுகளைக் கட்டியெழுப்ப உதவுகிறது. இது நீண்ட கால வெற்றிக்கு முக்கியமானதாகும்.

(5) **நற்பெயரை முகாமை செய்தல் :** நல்ல தொடர்பாடலானது நிறுவன பிம்பத்தை நம்பகமான தாகவும் வாடிக்கையாளரை மையப்படுத்தியதாகவும் பேண உதவுகிறது.

(02 புள்ளிகள் வீதம், 04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 04 இற்கான விடைகள்

அலகு 4 – வணிக நிறுவனங்களில் வியாபாரம்	
கற்றற் பேறுகள்	- சில்லறை விற்பனை, மொத்த விற்பனை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்தில் உள்ள புதிய போக்குகளை விபரித்தல்
	- சர்வதேச வர்த்தகம் மீது உலகளாவிய சூழல் தாக்கத்தை விபரித்தல்

(a) .

(1) **இலத்திரனியல் - வர்த்தகம் மற்றும் டிஜிடல்மயப்படுத்தல் :**

நிகழ்நிலையில் கொள்வனவுகளை மேற்கொள்ளுதல் மற்றும் டிஜிடல் தளங்களை நோக்கிய மாற்றமானது வணிகங்களுக்கான சந்தையை அடைவதை விரிவுபடுத்தியுள்ளது. இது உலகளாவிய ரீதியில் வாடிக்கையாளர்களை இணைப்பதற்கும் பரந்தளவிலான தயாரிப்புகளை வழங்குவதற்கும் உதவுகிறது. இது நிகழ்நிலை உட்கட்டமைப்பு, டிஜிடல் சந்தைப்படுத்தல், மற்றும் வலுவான வழங்கல் சங்கிலி முகாமைத்துவ முறைமைகள் ஆகியவற்றில் முதலீடுகளையும் அவசியமாக்குகிறது.

(2) **தனிப்பயனாக்கப்பட்ட வாடிக்கையாளர் அனுபவங்கள் :**

நுகர்வோர்கள் தனிப்பயனாக்கப்பட்ட தொடர்புகள் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட உற்பத்திப்பொருள் பரிந்துரைகளை அதிகளவில் எதிர்பார்க்கின்றனர். வணிகங்கள் தனிப்பட்ட விருப்பங்களைப் புரிந்துகொண்டு, தனிப்பயனாக்கப்பட்ட அனுபவங்களை வழங்க வாடிக்கையாளர் திருப்தி மற்றும் விசுவாசத்தை மேம்படுத்த தரவுப் பகுப்பாய்வு மற்றும் வாடிக்கையாளர் உறவு முகாமைத்துவ (CRM) முறைமைகளைப் பயன்படுத்த வேண்டும்.

(3) **நிலைபேற்றுத்தன்மையும் நெறிமுறை நடைமுறைகளும் :**

சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் குறித்து வளர்ந்துவரும் நுகர்வோர் விழிப்புணர்வுகள் நீடித்திருக்கத்தக்க பொருள்கள் மற்றும் நெறிமுறைசார்ந்த வணிக நடைமுறைகளுக்கான தேவையை முன்னிலைப்படுத்துகிறது. நுகர்வோர் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதற்கும் பண்டக்குறிக்கான நற்பெயரைக் கட்டியெழுப்புவதற்கும் மூலப்பொருள்களை ஆதாரமாகக் கொள்வதிலிருந்து உற்பத்தி மற்றும் விநியோகம் வரை வணிகங்கள் தங்கள் செயற்பாடுகளில் நிலைபேற்றுத்தன்மையை ஒருங்கிணைக்க வேண்டும்.

(4) **வழங்கல் சங்கிலியை உகந்ததாக்கல் :**

விரைவான விநியோகம் மற்றும் உற்பத்திப்பொருளின் கிடைப்பனவுத் தன்மைக்கான வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வினைத்திறனும் வெளிப்படைத்தன்மையும் கொண்ட வழங்கல் சங்கிலிகள் மிக முக்கியமானவை ஆகும். வழங்கல் சங்கிலியின் கட்புலனாகும் தன்மையை மேம்படுத்தவும் தயாரிப்புகளைக் கண்காணிக்கவும் ஏற்பாட்டியல் சேவையை உகந்ததாக்குவதற்கும் வணிகங்கள் கட்டச்சங்கிலி மற்றும் IoT போன்ற தொழினுட்பங்களைப் பயன்படுத்துகின்றன.

(5) **நுகர்வோர் விருப்பங்களுக்கேற்ப மாறுதல் :**

நுகர்வோர் விருப்பத்தேர்வுகள் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து வருவதுடன் சமூகப் போக்குகள், தொழினுட்ப மேம்பாடுகள், மற்றும் கலாசார மாற்றங்களால் அவை செல்வாக்கிற்கு உள்ளாகின்றன. வணிகங்கள் இந்த மாற்றங்களைக் கண்காணிக்க வேண்டும் என்பதுடன் சந்தைத் தரவுகளையும் பகுப்பாய்வு செய்ய வேண்டும். அத்துடன் அவர்களுக்கு உற்பத்திப் பொருள்களுக்கான சலுகைகளை வழங்குவதுடன் சந்தைப்படுத்தல் உத்திகளைப் பொருத்தமானவாறு மாற்றுதல் வேண்டும்.

(6) **உலகளாவிய போட்டி :**

சில்லறை விற்பனை மற்றும் ஏற்றுமதிகளில் புதிய போக்குகள் உலகளாவிய போட்டியை தீவிரப்படுத்தியுள்ளன. உலகளாவிய சந்தையில் வணிகங்கள் தனித்துவமான உற்பத்திப்பொருள் சலுகைகள், விதிவிலக்கான வாடிக்கையாளர் சேவை, மற்றும் வினைத்திறனான செயற்பாடுகள் ஆகியவற்றின் ஊடாக தம்மை வேறுபடுத்திக் கொள்ள வேண்டும்.

(7) **ஒழுங்குமுறைத் தளத்தை வழிநடத்தல் :**

சர்வதேச வர்த்தகம் பல்வேறு விதிமுறைகள் மற்றும் இணக்கத் தேவைகளுக்கு உட்பட்டது. வணிகங்கள் சுமுகமான செயற்பாடுகளை உறுதி செய்வதற்கும் சட்டச் சிக்கல்களைத் தவிர்ப்பதற்கும் வர்த்தகச் சட்டங்கள், விதிப்பனவுகள், மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் குறித்து அறிந்திருக்க வேண்டும்.

(8) **புத்தாக்கமும் தொழினுட்பங்களை ஏற்றுக்கொள்ளுதலும் :**

முன்னேறுவதற்கு தொடர்ச்சியான புத்தாக்கம் மற்றும் புதிய தொழினுட்பங்களை ஏற்றுக்கொள்வது அவசியம் ஆகும். வணிகங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தியில் முதலீடு செய்தல் வேண்டும், புதிய தொழினுட்பங்களைப் பரிசீலிக்க வேண்டும், மாறிவருகின்ற தொழினுட்பத் தளங்களுக்கு ஏற்ப மாறத் தயாராக இருத்தல் வேண்டும்.

(9) **வலுவான பண்டக்குறியைக் கட்டியெழுப்புதல் :**

போட்டி மிகுந்த சந்தையொன்றில், ஒரு வலுவான பண்டக்குறி அடையாளத்தைக் கட்டியெழுப்புவது அவசியமாகும். வணிகங்கள் ஒரு தனித்துவமான பண்டக்குறி ஆளுமையை விருத்தி செய்வதில் அவற்றின் மதிப்புகளை பயனுறுதிமிக்க வகையில் தொடர்பாடுவதிலும் வலுவான வாடிக்கையாளர் உறவுகளை வளர்ப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

(10) **வாடிக்கையாளர் அனுபவத்தில் கவனம் செலுத்துதல் :**

நேர்மறையான வாடிக்கையாளர் அனுபவத்தை உருவாக்குவது வெற்றிக்கு மிக முக்கியமானதாகும். வணிகங்கள் தொடக்கப் பொருள் ஆய்வு முதல் கொள்வனவுக்குப் பின்னரான ஆதரவு வரை ஒவ்வொரு தொடுபுள்ளியிலும் வாடிக்கையாளர் திருப்திக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

(02 புள்ளிகள் வீதம், 06 புள்ளிகள்)

(b) உலகளாவிய சுற்றுச்சூழல் ஆனது வர்த்தகக் கொள்கைகள், நுகர்வோர் நடத்தை மற்றும் சுற்றுச்சூழல் நியமங்கள் ஆகியவற்றைப் பாதிக்கிறது. இலங்கையின் சூழமைவில், இது கீழ்வருவனவற்றை விளைவாக்குகிறது :

- **சுற்றுச்சூழலுக்கு உகந்த இறக்குமதிகள் :** உள்நாட்டு வணிகங்கள் உலகளாவிய சுற்றுச்சூழல் நியமங்களைப் பூர்த்தி செய்கின்ற நீடித்திருக்கத்தக்க பொதியிடலை இறக்குமதி செய்கின்றன.
- **ஏற்றுமதி உபாயச் சரிசெய்தல்கள் :** **Lanka Organics (Pvt) Ltd.** போன்ற கம்பனிகள் தங்கள் தயாரிப்புகளை (சேதனத் தேயிலை மற்றும் மசாலாப் பொருள்கள் போன்றவை) சர்வதேசப் போக்குகளுக்கு ஏற்பச் சரிசெய்கின்றன. சேதனப் பொருள்களுக்கான தேவைகள் வெளிநாட்டுச் சந்தைகளில் தங்கள் வாய்ப்புகளை மேம்படுத்துகின்றன.
- **இணக்க அழுத்தம் :** இலங்கை ஏற்றுமதியாளர்கள் வெளிநாட்டுச் சந்தைகளுக்கான அணுகலைப் பேணுவதற்கு சர்வதேச வர்த்தக ஒழுங்குவிதிகளைப் பின்பற்ற வேண்டும்.

(02 புள்ளிகள் வீதம், 04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 05 இற்கான விடைகள்

அலகு 6 – பொருளாதாரம் ஒன்றின் அபிவிருத்திக்கு தொழில்முனைவினதும் சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனங்களினதும் (SMEs) பங்களிப்பு		
கற்றற் பேறுகள்	-	SME-களின் செயலாற்றுகையை மேம்படுத்த கிடைக்கக்கூடிய வசதிகள் மற்றும் உதவிகளைப் பட்டியலிடுதல்
	-	பொருளாதார அபிவிருத்திக்கு தொழில்முனைவு மற்றும் SME-களின் முக்கியத்துவத்தை விபரித்தல்

(a)

(1) **தரிந்து** ''என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா'' திட்டத்தின் கீழ் ஒரு தொடக்கக் கடனைப் பெற்றுள்ளார். இது உற்பத்திக்குத் தேவையான மூலதனத்தை வழங்கியுள்ளது.

(2) அவர் NEDA இன் பயிற்சியிலிருந்து பயனடைந்துள்ளார். இது சந்தைப்படுத்தல் மற்றும் நிதியியலில் அவரது திறன்களை மேம்படுத்தியுள்ளது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையிடமிருந்து (EDB) பெற்ற நிறுவன அங்கீகாரமானது உலகளாவிய வர்த்தகக் கண்காட்சியில் அவரது தயாரிப்புகளை காட்சிப்படுத்துவதன் மூலம் சர்வதேச வெளிப்படுத்துகையைப் பெற அவருக்கு உதவியது.

(3) நிதியுதவி மற்றும் அறிவு, ஆதரவு ஆகியவற்றின் இந்தக் கலவையானது அவர் தனது வணிகத்தை வளர்க்கவும் புதிய சந்தைகளை அணுகவும் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கவும் அவரை அனுமதித்தது.

(02 புள்ளிகள் வீதம், 04 புள்ளிகள்)

(b) (1) **தொழில் உருவாக்கம் :** SME-கள் உள்நாட்டு மக்களை வேலைக்கு அமர்த்துகின்றன. இது வேலையின்மையைக் குறைக்க உதவுவதுடன் பிரதேச அபிவிருத்தியையும் மேம்படுத்துகிறது.

(2) **ஏற்றுமதி வளர்ச்சி :** உலகளாவிய சந்தைகளுக்குள் நுழைவதன் மூலம், **தரிந்துவின்** நிறுவனத்தைப் போன்ற SME-கள் அந்நியச் செலவாணியை ஈட்டி, நாட்டின் வர்த்தக வருவாயை அதிகரிக்கின்றன. இதுகூட சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருள்களின் ஏற்றுமதியாளராக இலங்கையின் பிம்பத்தை ஊக்குவிக்கிறது.

(3) **புத்தாக்கங்களை ஊக்குவித்தல் :** SME-கள் பெரும்பாலும் புத்தாக்கத் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை சந்தைக்குக் கொண்டு வருகின்றன. சுற்றுச்சூழலுக்கு உகந்த நார் சார்ந்த பொருள்கள் நீடித்திருக்கத்தக்க புத்தாக்கங்களை ஊக்குவிக்கின்றன.

(4) **கிராமப்புற மற்றும் பிராந்திய அபிவிருத்திக்கான ஆதரவு :** பெரும்பாலான SME-கள் முக்கிய நகரங்களுக்கு வெளியே அமைந்துள்ளன. **தரிந்துவின்** நிறுவனம் போன்ற வணிகங்கள் காலி போன்ற பிராந்தியங்களில் பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்ட உதவுகின்றன, இது தேசிய அபிவிருத்தியை சமநிலைப்படுத்த பங்களிப்புச் செய்கிறது.

(5) **உள்நாட்டு வளங்களின் பாவனை :** இது கொள்வனவு செய்யும் திறனை அதிகரிப்பதுடன், பொருளாதார வளர்ச்சி மற்றும் முழு வேலைவாய்ப்புக்கு அதிகளவில் பங்களிக்கிறது.

(6) **முறையாக வரிகளைச் செலுத்துதல் :** வரிகளைச் செலுத்துவதன் ஊடாக அரசாங்கத்திற்குத் தேவையான நிதிகள் வழங்கப்படுகின்றன.

(02 புள்ளிகள் வீதம், 06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி B முடிவு

ஒரு கட்டாய வினா

பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

வினா 06 இற்கான விடைகள்

அலகு 1 – **வணிகத்தின் எண்ணக்கருக்கள், வணிகச் சூழல் மற்றும் வணிக நிறுவனங்கள் மீதான அதன் தாக்கம்**

அலகு 2 – **நிறுவனங்களின் பல்வேறு வகைகள்**

அலகு 3 – **வணிகங்களுக்கான ஆதரவுச் சேவைகள்**

அலகு 6 – **பொருளாதாரம் ஒன்றின் அபிவிருத்திக்கு தொழில்முனைவினதும் சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனங்களினதும் (SMEs) பங்களிப்பு**

கற்றற் பேறுகள் - SWOT, PESTLE ஐப் பயன்படுத்தி வணிகச் சூழலை மதிப்பிடுதல்

- ஒவ்வொரு வகை நிறுவனங்களினதும் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் விபரித்தல்
- ஒவ்வொரு ஆதரவுச் சேவையினதும் பண்புகளை பட்டியலிட்டு, விபரித்தல்
- இலங்கை SME-களும் தொழில்முனைவும் எதிர்கொள்ளும் சவால்களை விபரித்தல்
- வணிகம் ஒன்றின் நாட்டதாரர்களையும் வணிகம் மீதான அவற்றின் தாக்கங் களையும் இனங்காணல்

(a) (1) **பலம் :**

- ஆரோக்கியத்தில் அக்கறை கொண்ட நுகர்வோரை ஈர்க்கும் தனித்துவமான கண்டுபிடிப்பு, கடினமான சேதனப் பொருள்களை வழங்குவது.
- வலுவான பண்டக்குறி இருப்பு மற்றும் அதிக போக்குவரத்துப் பகுதியில் ஒரு தந்திரோபாய இடத்தில் அமைந்துள்ளமை.

(2) **பலவீனங்கள் :**

- சேதன மூலப்பொருள்களை ஆதாரமாகக் கொண்டிருப்பதால் ஏற்படுகின்ற செயற்பாட்டுச் செலவுகள்.
- போதுமான தொழினுட்ப அறிவு இல்லாமை மற்றும் நிகழ்நிலை இருப்பின் அடிப்படை மட்டம்.

(3) **வாய்ப்புகள் :**

- ஆரோக்கியமான, சேதனப் பொருள்களுக்கான உலகளாவிய தேவை அதிகரித்து வருவது வளர்ச்சிக்கான வாய்ப்பை உருவாக்குகிறது.
- தொடர்ச்சியான ஆய்வு மற்றும் அபிவிருத்தி ஊடாக நிகழ்நிலை விற்பனையை விரிவுபடுத்துவதற்கும் புதிய பொருள்களை அறிமுகப்படுத்துவதற்கான வாய்ப்பும்.

(4) **அச்சுறுத்தல்கள் :**

- மாறுகின்ற விதிமுறைகளும் உயர்கின்ற செலவுகளும் இலாப எல்லைகளைக் குறைக்க முடியும்.
- நிதியை அணுகுவதில் உள்ள சிரமம் மற்றும் சர்வதேச சந்தைகளை விரிவுபடுத்தல்.

(06 புள்ளிகள்)

(b) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளின் அனுகூலங்கள் :

(1) குடும்பத்தில் உள்ள உறவினர்களின் உரிமையைப் பேணுவதற்கான ஆற்றல்.

(2) வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான மக்களிடையே கம்பனியின் கட்டுப்பாட்டைத் தக்கவைப்பதற்கான ஆற்றல்.

(3) வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான மக்களிடையே இலாபத்தைப் பகிர்வதற்கான ஆற்றல்.

(4) அதிக மூலதனத்தைத் திரட்டுவதற்கான ஆற்றல்.

(5) பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உள்ளது.

(6) சட்ட ஆளுமையாக இருக்கிறது.

(7) பொதுக் கம்பனிகளுடன் ஒப்பிடுகையில் சட்டபூர்வத் தாக்கம் குறைவானது.

(8) வணிகத் தொடர்ச்சித்தன்மை உள்ளது (தொடர்ந்தியங்கும் தன்மை).

(9) முகாமை மூலமான சபையின் பயனுறுதிமிக்க முகாமைத்துவம்.

(10) அனைத்துப் பங்குதாரர்களினதும் ஒருமனதான தீர்மானம் இல்லாமல் கம்பனியின் பெரும்பாலான வேலைகளைச் செய்வதற்கான ஆற்றல்.

(11) கடன் சோதனை இன்றி பங்குதாரர்களுக்கு பங்கிலாபத்தை வழங்கும் ஆற்றல்.

(12) பல்வேறு வரிச் சலுகைகள். **(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளின் பிரதிகூலங்கள் :

(1) பொதுக் கம்பனிகளுடன் ஒப்பிடுகையில் குறைவான மூலதனத் திரட்டல் உள்ளது.

(2) பங்குச் சந்தையை ஆவணப்படுத்த முடியாது / அதிகாரபூர்வ பட்டியலிடப்பட்ட கம்பனியாக இருக்க முடியாது.

(3) பங்குகளைச் சுதந்திரமாக மாற்ற இயலாது.

(4) கம்பனிகள் சட்டத்தின் சட்டத் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும்.

(5) கூட்டிணைப்பு சிக்கலானதாகவும் செலவு கூடியதாகவும் இருக்கலாம்.

(6) நிருவாகத்தின் அதிக செலவு.

(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)

(c)

(1) வங்கியியல்.

(2) தொடர்பாடல்.

(3) காப்புறுதி.

(4) போக்குவரத்து.

(5) ஏற்பாட்டியல். **(01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)**

(d) (1) **SME போட்டித்தன்மைக்கு தந்திரோபாய வளங்களை அணுகுவதற்கான ஆற்றல் முக்கியமானது** :

குறிப்பிட்ட தடைகள் மற்றும் சந்தைத் தோல்விகள் SME -கள் நிதி, முகாமைத்துவக் கொள்ளளவு மற்றும் திறன்கள், அறிவுசார் வலையமைப்புகள் உள்ளிட்ட தந்திரோபாய வளங்களை அணுகுவதைத் தடுக்கலாம். இதனால் உலகளாவிய மற்றும் டிஜிடல்மயப்படுத்திய பொருளாதாரத்தில் அவற்றை போட்டித்தன்மையற்ற நிலையில் வைக்கலாம்.

(2) **திறன்களின் பற்றாக்குறை, மோசமான முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் பணியாளர் பயிற்சி ஆகியவை SME உற்பத்தித்திறன் மற்றும் புத்தாக்கங்களைக் கட்டுப்படுத்துகின்றன :**

பெரிய நிறுவனங்களை விட SME-கள் அதிக திறன் குறைபாடுகளைக் கொண்டுள்ளன என்பதற்கான சான்றுகள் உள்ளன. மேலும், பெரிய நிறுவனங்களை விட SME பயிற்சி முயற்சிகள் சராசரியாக ஒரு ஊழியருக்கு கணிசமானளவு பலவீனமாக உள்ளது. SME-கள் பெரும்பாலும் பொருத்தமான திறன்களைக் கொண்ட உயர் தகைமையுடைய ஆளணியினர் மற்றும் பணியாளர்களை ஈர்ப்பதிலும் தக்கவைத்துக் கொள்வதிலும் சவால்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் தொழிலாளர் சந்தையில் தேடப்படும் திறன்களைக் கொண்ட தொழிலாளர்களை அடையாளங் காண்பதும் அதிக சிரமமாக உள்ளது.

(3) **டிஜிடல்மயமாக்கல் SME-கள் உலகளாவிய பொருளாதாரத்தில் பங்கேற்க புதிய வாய்ப்புகளை வழங்குகிறது :**

டிஜிடல் தொழினுட்பங்கள் SME-கள் சந்தை நுண்ணறிவை மேம்படுத்தவும் பெருந்திரளின்றி அளவை அடைவதற்கும், ஒப்பீட்டளவில் குறைந்த செலவில் உலகளாவிய சந்தைகள் மற்றும் அறிவு வலையமைப்பை அணுகுவதற்கும் அனுமதிக்கின்றன. டிஜிடல் மாற்றமானது ''பிறந்த உலகளாவிய'' சிறிய வணிகங்களின் தோற்றத்தை எளிதாக்குவதுடன் பொருள் அல்லது சேவைப் புத்தாக்கம் மற்றும் மேம்படுத்தப்பட்ட உற்பத்திச் செயன்முறைகள் ஊடாக உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளில் SME-கள் தமது போட்டித்தன்மையை மேம்படுத்த புதிய வாய்ப்புகளை வழங்குகிறது.

(4) உலகமயமாக்கல் மற்றும் பொருளாதார ஒருங்கிணைப்பு காரணமாக பெரிய பல்தேசிய நிறுவனங்களிடமிருந்து சந்தைப் போட்டி மற்றும் விழிப்புணர்வு அதிகரித்துள்ளது ; R&D செலவுகள் மற்றும் புத்தாக்கங்கள் (பொருள், செயன்முறை, நிறுவனம்) தொடர்பில் பெரிய நிறுவனங்களுக்கு எதிராக போட்டியிட முடியாமை.

(01½ புள்ளிகள் வீதம், 03 புள்ளிகள்)

(e)

(1) **வாடிக்கையாளர்கள் :**

- ஆரோக்கியமான, தரமான பொருள்களின் தேவையானது உற்பத்தி தொடர்பான தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்துகின்றன.
- சேதனப் பொருள்களுக்கான தேவையானது விற்பனை மற்றும் பொருள் அபிவிருத்தியை அதிகரிக்கிறது.

(2) **வழங்குநர்கள் :** சேதன மூலப் பொருள்களின் உரிய நேர மற்றும் நம்பகமான விநியோகத்தை உறுதி செய்தல்.

(3) **ஊழியர்கள் :** இவர்களின் திறன்கள் மற்றும் ஊக்கப்படுத்தலானது உற்பத்தித்திறன் மற்றும் புத்தாக்கத்தையும் சீரான நாளாந்தச் செயற்பாடுகளையும் நேரடியாகப் பாதிக்கின்றன.

(4) **அரசாங்கமும் முதலீட்டாளர்களும் :** ஒழுங்குமுறை வழிகாட்டல் மற்றும் நிதி ஆதரவை வழங்குதலானது வணிகச் செயற்பாடுகள் மற்றும் வளர்ச்சித் திறனை வடிவமைக்கிறது.

(02 புள்ளிகள் வீதம், 04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி C முடிவு